1978 மார்ச் 31]

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒன்றியங்கள்

* 742 வினு-டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு, ஊத்தங்கரை, தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிய ஒன்றியங்கள் ஏற்படுத்தும் செயல்திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம்: ஒன்றியங்கள் பெரிய ஒன்றியங்கள், சிறிய ஒன்றியங்கள் என்று பலப் பல வகைகளில் இருக்கிற காரணத்தால் மாநிலத்தில் இருக்கக்கூடிய எல்லா ஒன்றியங்களையும் சேர்த்து சமமாகப் பிரிக்கக்கூடிய வகையில் நாற்பது ஊராட்சி மன்றங்கள் கொண்ட ஒன்றியங்களாக மாற்றியமைக்கக் கூடிய ஒரு குறிப்பு இருப்பதாக அறிகிறேன். அந்தச் சூழ்நிலையில் இந்த பாலக்கோடு. ஊத்தங்கரை, தளி ஆகிய ஒன்றியங்களைச் சீரமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக் கூடிய ஒன்றியங்களைப் பிரிக்கக்கூடிய செயற்குறிப்பு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடம் இருக்கிறது. அது அரசுக்கு வந்ததற்குப் பிறகு ஆய்வு செய்யப்படும். பெரிய ஒன்றியங்களைப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. திருவேங்கடம் அவர்கள் இந்த வினுவிலுள்ள ஒன்றியங்களைப்பற்றிக் கேளுங்கள். வேறு ஒன்றியங்கள் பற்றிக் கேட்கக் கூடாது.

திரு, பெ. சு. திருவேங்கடம்: அடுத்த தேர்தலுக்கு முன்பாக எத்தனை ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மூன்று ஒன்றியங்களைப் பிரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்றென்றைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசினிடத்தில் இருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை பெரிய யூனியனுக இருக்கின்ற காரணத்தால் இதைப் பிரிக்க வேண்டும் என்று அதற்கான

சான்றிதழ்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த யூனியனைப் பிரித்து அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; இதற்கான செயற் குறிப்பு இன்னும் அரசுக்கு வரவில்லை. அரசுக்கு வந்ததும் இது ஆய்வு செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் ; அமைச்சர் அவர்கள் மூன்று ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கப் போவதாகக் குறிப்பிட்டார்கள். அந்த ஊராட்சி ஒன்றியங்கள் எவை எவை என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திருவரங்குளம், போகலூர் இந்த இரண்டும், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கியைப் பற்றிய கருத்துருவும் அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. ஒ. சுப்பிரமணியன் ; தலைவர் அவர்களே, ஒன்றியங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஜனத் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டதாக நினைவு. இப்போது பரப்பளவு அதிகமாக் இருக்கிற காரணத்தினுல், நிர்வாக சௌகரியத்துக்காகவும், ஜனங்களின் வசதியையும் கருதி பஞ்சாயத்து யூனியன்களைத் திருத்தி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; உத்தேசம் உண்டு.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. இருந்தும் இன்னும் அரசுக்கு அந்த கோரிக்கை அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது. எப்போது அரசுக்கு வரும், எப்போது இதன் மீது முடிவு எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அனுப்பப்படுகின்ற கோரிக்கைகளில் சில பல கருத்துக்கள் குறித்து விளக்கமாகக் கேட் பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பியிருக் கக்கூடும். இதனுல்தான் கால தாமதம் ஏற்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறையின் பரிந்துரை அரசுக்கு வந்ததும் இதனை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவிநாசி பேரூராட்சி.

*743 வினு—திரு. சொ. ந. பழனிச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

அவிநாசி பேரூராட்சியை நகராட்சியாக்க ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.